

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (29.02.2024) சென்னை, மடுவின்கரை பகுதியில் முதலமைச்சரின் விரிவான முதலமைச்சர் காப்பீட்டு திட்ட முகாமில் 1013 பயனாளிகளுக்கு காப்பீடு அட்டையினை வழங்கினார். இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத்தலைவர் துரைராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஷகிலா மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.



போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் நேற்று (29.02.2024) தலைமைச் செயலகத்தில், மாநகர் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கான மொபைல் செயலி மற்றும் அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்தில் முன்பதிவு செய்யும் பயணிகள் 40 ரூபாய் கூடுதலாக செலுத்தி கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் இருந்து பிற இடங்களுக்கும், பிற இடங்களில் இருந்து கிளாம்பாக்கத்திற்கும் மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் 4 மணி நேரத்திற்குள் பயணம் செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், அரசு விரைவுப் போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குநர் இரா.மோகன், மா.போ.க. இணை மேலாண் இயக்குநர் க.குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்: நல உதவிகள் - கழகக் கொடியேற்றல்!

## கழக இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மார்ச் 1-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை யொட்டி நல உதவிகள், கழகக்கொடியேற்றல்உள்ளிட்டபல் வேறு தீர்மானங்கள் கழக இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கழக இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் கலந்தாய்வு கூட்டம் 27.02.2024 செவ்வாய்கிழமை மாலை புலவர் இந்திரகுமாரி தலைமையில் கழக இலக்கிய அணி செயலாளர் வி.பி.கலைராஜன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் நந்தனம் நம்பிராஜன் இலக்கிய அணி இணை செயலாளர், ஈரோடு இறைவன் இணை செயலாளர், புரவலர் செந்தில், நா.சந்திரபாபு பொருளாளர், ஆர்.தசரதன் துணை செயலாளர், பிரம்மபுரம் பழனி துணை செயலாளர், பெருநாழி போஸ், துணை செயலாளர், கே.எஸ்.எம்.நாதன், துணை செயலாளர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அது வருமாறு:-

அண்ணா அறிவாலயத்தில் துணை மேலாளராகவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மற்றும் கழகத் தலைவர் தளபதி அவர்களின் உண்மையான விசுவாசியாகவும், கழகத்தினரிடம் இனிமையாக பழகக் கூடிய நீண்ட கால கழகப் பற்றாளராக பணியாற்றிய அனைவரின் பாசத்துக்குரியவராக விளங்கிய ஜெயக்குமார் திடீர் மறைவு மிகப் பெரிய இழப்பாகும். அவரின் மறைவிற்கு கழக இலக்கிய அணி ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது. மேலும் இலக்கிய அணி இணைச் செயலாளர் மூத்த செயல் வீரர் கயல் தினகரன், துணை செயலாளர் ஆர்.எம்.டி.ரவிந்திரன், துணைத்தலைவர் கவிஞர் கவிதைப் பித்தன் தாயார் மறைவிற்கும் கழக இலக்கிய அணி ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பள்ளி பருவத்திலிருந்து இந்தி எதிர்ப்பு போரில் கலந்து கொண்ட நாள் முதல் அறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்கு பிறகு தமிழ்நாடு முதல்வராக திகழ்ந்து தமிழ்நாடு மக்களுக்கு பயன் தரும் நல்லாட்சி தந்ததோடு இந்திய அரசியலை பல தருணங்களில் தீர்மானிக்கும் முக்கிய தலைவராக விளங்கினார். தந்தை பெரியார் அவர்களின் சமூகநீதி, பகுத்தறிவு, பெண்கள் நலன் என அனைத்திலும் உறுதியாக இருந்து சாதனை புரிந்தார். அந்த மாபெரும் தலைவரின் வாழ்க்கையை சித்தரிக்கும் வகையில் எழில்மிகு நினைவகம் அமைத்ததோடு கலைஞர் அவர்களின் அண்ணனாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தையும் புதுப்பித்து திறந்து வைத்த முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு கழக இலக்கிய அணி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாளை மக்கள் பயனுரும் வண்ணம் நலத்திட்டங்கள் செய்வதோடு அன்னதானம் வழங்குதல், கழக கொடி ஏற்றுதல், கழக அரசின் சாதனைகளை மக்களிடம் திண்ணைப் பிரச்சாரம் மூலம் கொண்டு சேர்த்தல் என்று தீர்மானிக்கிறது.

சேலத்தில் கழகத்தின் சார்பாக நடந்த மாநாடுகளிலேயே மிகப் பெரிய இளைஞர்கள் பெருந்திரளாக கலந்து கொண்ட இளைஞர் அணி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக்காட்டி கழக வரலாற்றில் முத்திரைப் பதித்த கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை மணமுவந்து பாராட்டுவதோடு மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது என்று தீர்மானிக்கிறது.

வர இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலில் கழக கூட்டணி வேட்பாளர்கள் 40 தொகுதிகளிலும் வெற்றிபெற கடுமையாக உழைப்பது என்றும் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்துவது என்று தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சியில் பொருளாளர் நா.சந்திரபாபு தயாரித்த பிரச்சாரப் பாடல் ஒளிநாடா, டி.கே.எஸ்.இளங்கோவன் வெளியிட, அதனை புலவர் இந்திரகுமாரி மற்றும் செயலாளர் வி.பி.கலைராஜன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இறுதியில் செந்தில் நன்றி கூறினார்.

## எஸ்.முரளி தலைமை! நந்தனம் கி.மதி முன்னிலை!

# முதல்வர் பிறந்தநாள் விழா - கழக கொடியேற்றி சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நடத்தி வைக்கிறார்!

சென்னை, மார்ச். 1-

மயிலை கிழக்கு பகுதி திமுக. சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாயொட்டி கழக இரு வண்ண கொடியேற்றி பொது மக்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி இன்று (01.03.2024 - வெள்ளிக்கிழமை) காலை 7 மணி அளவில் கைலாசபுரத்தில் நடைபெறுகிறது.

கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ். முரளி தலைமையில், மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் கி.மதி முன்னிலையில்

கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவகத்துக்கு செல்லும் வழியில் மயிலை கிழக்குப் பகுதியில் தலைவர் அவர்களுக்கு வரவேற்பு அளித்து கழக இரு வண்ண கொடியேற்றி பொதுமக்களுக்கு காலை உணவை மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்.

நிகழ்ச்சியில் மயிலை கிழக்குப் பகுதி உடன்பிறப்புகள், அனைவரும் அலைக்கடலென திரள்வீர்!

மயிலை பகுதியில் உள்ள வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட .பகுதி அளவிலான அணிகளின் நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள்,

அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி நிகழ்ச்சி ஏற்பாடு செய்துள்ளார்.

## துணை மேயர் மு.மகேஷ்குமார் கொடியேற்றி உணவு வழங்குகிறார்

# சைதை 169-வது வட்டத்தில் முதல்வர் பிறந்த நாள் விழா!

## வட்டச் செயலாளர் எல்.ஆரோக்கியராஜ் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 1 -

கழகத் தவைர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி

இன்று (1.3.2024) 169 -வது வட்டக் கழக அலுவலகத்தில் வட்டச் செயலாளர் எல். ஆரோக்கியராஜ் ஏற்பாட்டில் கழகக் கொடியேற்றி இனிப்பு அறுசுவை உணவு 500 பேருக்கு வழங்கப்படுகிறது.

ரங்கராஜபுரத்தில் மு.சந்திரா ஏற்பாட்லும், தாலுக்கா அலுவலகம், வெங்கடாபுரம் நுழைவு வாயல் அருகில் வட்ட துணைச் செயலாளர் துரைசரவணன் ஏற்பாட்டிலும் கொடியேற்றி இனிப்பு - உணவு வழங்கப்படுகிறது.

வெங்கடாபுரம் கலைஞர் பொதுப்பணி மன்றத்தில் பகுதி இளைஞரணி துணைஅமைப்பாளர் கோர்ட் வி. அருண் தலைமையிலும், வெங்கடாபுரம் ஏ. பிபாள் அருகில் பரணி தலைமைலும், ஏ1 பிளாக் அருகில் பகுதி அமைப்பாளர் அ.தமிழ்அரசன் தலைமையிலும் கொடியேற்றி இனிப்பு வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சிகளில் சென்னைமாநகர துணை மேயர் மு.மகேஷ்குமார் கலந்து கொண்டு கொடியேற்றி உணவு வழங்குகிறார்.

இதில் பகுதி துணைச் செயலாளர் மு.ஆரோக்கியம், மாவட்டப் பிரதிநிதி சுதாபிரியன் கலந்து கொள்கின்றனர்.

இநநிகழ்ச்சிகளில் வட்டக் கழகத்தினர் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் எல்.ஆரோக்கியராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

# 170- வது வட்டத்தில் இனிப்பு - உணவு வழங்கல்!

## வட்டச் செயலாளர் க.மணி அறிவிப்பு!

சென்னை, மார்ச். 1 -

சென்னை, 170 - வது வட்டச் செயலாளர் க.மணி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையெட்டி இன்று (1.3.2024) சைதை கிழக்குப் பகுதி 170-வது வட்டத்தில் ஏ.கே. உதயா தலைமையில் வரதராஜபுரத்திலும், டி.ராமகிருஷ்ணன் தலைமையிலும், கே.இளவழகன் தலைமையில் சித்ரா நகரிலும், கொடியேற்றி உணவு வழங்கப்படுகிறது.

மேலும் கோட்டூர் மார்க்கெட் பகுதியில் சந்திரன் தலைமையில் - பொன்னியம்மன் கோயில் அருகில் உமாபதி , விஜயகுமார் தலைமையிலும், சூர்யாநகரில ஜி.விசேஷ், வி.சந்துரு, கே. அசோக் ஆகியோரது தலைமையிலும், புவனேஸ்வரி தலைமையில் புதிய நகர்புற வாழ்விட குடியிருப்பிலும் கொடியேற்றி உணவு வழங்கப்படுகிறது.

பார்வதி, ஏ.அப்துல் பாட்சா டி.ராஜாங்கம் ஆகியோரது தலைமையிலும், சித்ரா நகர் பகுதியில் பூமிநாதன், கே. கோபி, சி.குணசேகர், எம்.சி.சி.மூர்த்தி ஆகியோரது தலைமையிலும், கே.பன்னீர்செல்வம் தலைமையில் டேங்க் காலனி அருகிலும் கொடியேற்றி இனிப்பு வழங்கப்படுகிறது.

மாவட்டப் பிரதிநிதி என். பாபு தலைமையில் கோட்டூர் மாநகராட்சி பள்ளி அருகில் 3.3.2024 அன்று மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

10.3.2024 அன்று வட்டச் செயலாளர் க.மணி தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இவ்வாறு வட்டச் செயலாளர் க.மணி தெரிவித்துள்ளார்.

## தா.மோகன்குமார் எம்.சி. தலைமையில்

# 168 அ வட்டத்தில் கழகக் கொடி ஏற்று விழா!

சென்னை, மார்ச் 1 -

168-வது அ வட்டத்தில் வட்டகழக செயலாளரும் வார்டு மாமன்ற உறுப்பினருமான தா.மோகன்குமார் ஏற்பாட்டில் கழகதலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (01-03-2024) வெள்ளிக்கிழமையன்று காலை 8 மணியளவில் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்குமருத்துவமனை அருகில் அருளாயம்மன்பேட்டையில் கழக இருவண்ண கொடியேற்றி இனிப்புகள் வழங்கி பொதுமக்கள் 500 பேருக்கு காலை சிற்றுண்டி உணவினை வழங்க உள்ளார். மேலும் 168வது அ வட்டத்திற்குட்பட்ட அனைத்துபாகங்களிலும் ஒளி-ஒலி அமைத்து கழக நிர்வாகிகள் கழக இருவண்ண கொடியேற்றி இனிப்புகள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி எஸ்.சேகர், வட்டகழக நிர்வாகிகள், வட்ட அவைதலைவர் இ.சீனிவாசன், வட்டதுணைசெயலாளர்கள் த.பாண்டியன், கொடிபாலா, மீனாபரந்தாமன், வட்டபொருளாளர் ஜி.என்.நாராயணன், பகுதி பிரதிநிதிகள் ஈகைஹரி, எம்.மேகநாதன், ஜி.வெங்கடேசன், டி.மனோகரன், லிங்கேஸ்வரன், மாவட்டதுணைஅமைப்பாளர்கள் க.வேல்முருகன், பி.செல்வம், பார்சன் கே.லோகு, பகுதி இளைஞர்அணி துணை அமைப்பாளர் எம்.குணா, மற்றும் அனைத்து அணிகளை சார்ந்த கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாகமுகவர்கள், பாக களப்பணியாளர்கள், வட்ட இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மதுரபாக்கம் முதல் நிலை ஊராட்சி ஒன்றியத்தில் 6 கோடி 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலைகள், மேல்நிலை நீர் திறக்க தொட்டி, பூங்காக்கள் திறந்த வெளி கிணறு, காரிய மண்டபம், மாம்பாக்கம் மெயின் ரோடு வனப்பகுதியில் மின்சார விளக்குகள் ஆகியவற்றை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாநகரக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி திறந்து வைத்தார். உடன் மதுரபக்கம் ஊராட்சி ஒன்றிய தலைவர் மு.வேல்முருகன் ஒன்றிய கவுன்சிலர் அமுதா வேல்முருகன் கிளைக் கழக செயலாளர் இரா சந்தானம் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலையரசி சங்கர், வே டில்லிபாபு, கோ.நகரத்தினம், தேவி சரவணன், வி.வெங்கடேஷ், பெருமாள் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகளும் பொதுமக்களும் அனைவரும் கலந்து கொண்டனர். இதனை தொடர்ந்து மதுர பக்கத்தில் இருந்து கலைஞர் நகரில் குடியேறிய 75 குடும்பங்களுக்கு அடிப்படை வசதி ரோடு குடிதண்ணீர் மின்சார வசதி அவைகளை அமைத்து தர வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினரிடம் மனுக்களை கொடுத்தார்கள். அதனைப் பெற்றுக்கொண்டு உடனடியாக சரி செய்து தர வேண்டும் என்று அரசு அதிகாரிகளிடம் கூறினார்.

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! புனிதவதி எத்திராசன் தலைமையில்

# திரு.வி.க. நகர் வடக்கு பகுதியில் மக்கள் முதல்வரின் மனிதநேய திருவிழா வாழ்த்தரங்கம்!

## இந்து என்.ராம் - கு.ஞானசம்பந்தம் - நடிகர் தங்கர் பச்சான் சிறப்புரை !

சென்னை மார்ச்:1

சென்னை கிழக்கு மாவட்டம்,திரு.வி.க. நகர் வடக்கு பகுதி தி.மு.க.சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய திருவிழா,சூரியச் சுடர் 33, 'மக்கள் போற்றும் முதன்மை மாற்றம் கண்ட தலைமை' எனும் தலைப்பில் வாழ்த்த ரங்கம் நிகழ்ச்சி,நாளை (2.3.2024 சனிக்கிழமை ) மாலை 6மணி அளவில் ஹேம்ராஜ் பவன், ஓட்டேரியில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட துணைச் செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான புனிதவதி எத்திராசன் தலைமை வகிக்கிறார்.

மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சருமான பி.கே.சேகர் பாபு முன்னிலை வகித்து சிறப்புரையாற்றுகிறார்.

சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி,ப.தாயகம் கவி எம்.எல்.ஏ,அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ,இ.பரந்தாமன் எம்.எல்.ஏ,செ.தமிழ்வேந்தன்,எம்.சாமிகண்ணு, சரிதா மகேஷ்குமார், டாக்டர் பி.யாழினி, கோ. ஏகப்பன்,தேவஜவகர்,ஜி.எம்.தேவன்,இசட் ஆசாத்,டி.லோகேஷ்,பி. உதயசங்கர்,பி.ஜெ. துளசிங்கம், புரசை ஜி.தாமோதரன்,நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான்,கா.ராஜ் முகமது, பெரம்பூர் ராஜன், எல் பாண்டுரங்கன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்ச்சியில் மூத்த பத்திரிகையாளர் இந்து. என். ராம்,நடிகர் மற்றும் பேச்சாளர் கு. ஞானசம்பந்தம், இயக்குனர் மற்றும் நடிகர் தங்கர்பச்சான் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் மாநில,மாவட்ட பகுதி கழக,வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை பலன்களை மற்றும் கழக அரசின் சாதனைகளை ஒன்றிய பாஜக ஆட்சியின் அநீதிகளையும் விளக்கி தெருமுனை கூட்டம் சொரக்காயப்பேட்டை கிராமத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., தலைமை கழக பேச்சாளர் எழும்பூர் கோபி ஆகியோர் சிறப்புரையாற்றினார். இதில் தொகுதி பார்வையாளர் என்.மனோகரன், ஒன்றிய செயலாளர் பிடி.சந்திரன் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டார்கள்


